
**6.2** : ***நீளத்தை அளத்தல்*** தொடர்பான பிரசினங்களைத் தீர்ப்பார்.

❖ இரண்டு பொருள்களின் நீளங்களை ஒப்பிடுவார். (நீளம் கூடிய, குறைந்த, சமமான)

உ+ம் -



1). பிள்ளைக்கு புகைவண்டியை நினைவுபடுத்தி இப்பாடலை சொல்லிக் கொடுங்கள்.

சுக்கு பக்கு சுக்கு பக்கு – கூ கூ கூ கூ

சுக்கு பக்கு சுக்கு பக்கு – யாழ் தேவி வருகுது

சுக்கு பக்கு சுக்கு பக்கு – உதயதேவி வருகுது

இரண்டு ரயில் வருகுது.


பாடல் பாடிய பின்னர், படத்தைப் பார்த்து நீளம் கூடிய புகைவண்டி எது? நீளம் குறைந்த புகைவண்டி எது? என வினவுங்கள்.

2). நீளம் குறைந்த புகைவண்டியில் எத்தனைப் பெட்டிகள் குறைவாயுள்ளன. எனவினவுங்கள்.


3). தீப்பெட்டியைக் கொண்டு புகைவண்டிகள் ஆக்குமாறு வழிப்படுத்துங்கள்.

❖ நீளம் கூடிய அளவில் ஒன்றும் குறைந்தளவில் ஒன்றும் சமமானவை இரண்டும் ஆக்குவதற்கு வழிப்படுத்துங்கள்.


i). **<u>நீளம் கூடிய</u>** பொருளைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிட வழிப்படுத்துங்கள்.



ii). **<u>நீளம் குறைந்த</u>** பொருளைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிட வழிப்படுத்துங்கள்.



iii). **<u>நீளத்தில் சமமான</u>** இரண்டு பொருள்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.



❖ செயல்நூலிலுள்ள பயிற்சிகளை செய்வதற்கு வழிகாட்டுங்கள்.